**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 197/2013**

**வாதி தரப்பு சாட்சி–1 பானுமதி – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 05.11.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:</u>**

1) வா.சா.ஆ.1 செட்டில்மென்ட் ஆவணம் மாணிக்கத்தால் எழுதிக் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்துக்களை பொறுத்து மாணிக்கத்திற்கு எவ்வித உரிமையோ பாத்தியமோ இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்துக்கள் ஆரம்பத்தில் முத்துச்சாமிக்கு பாத்தியப்பட்டது என்றால், முத்துச்சாமி, மாணிக்கம், சீரங்காயி, சின்னம்மாள் ஆகியோர் சேர்ந்து முத்துச்சாமி பெயரில் வாங்கியது. மாணிக்கம், சீரங்காயி, சின்னம்மாள் மூவரும் முத்துச்சாமியுடன் சேர்ந்து கிரையம் வாங்கியதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. முத்துச்சாமி கிரையம் வாங்கிய சொத்துக்களில் ஒரு பகுதிதான் செட்டில்மென்ட் ஆவணத்தில் கண்ட சொத்தா என்றால் ஆமாம். வா.சா.ஆ.3 பட்டா நான் பொய்யாக ஏற்படுத்திக் கொண்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 மற்றும் 5 பட்டாவிற்கும், தாவா சொத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரிதான்.

2) வா.சா.ஆ.5 ஆவணம் வழக்கிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 முதல் 16 வரையிலான ஆவணங்கள் வாயிலாக எனக்கு தாவா சொத்துக்களில் எந்த உரிமையும் கிடைக்காது என்றால் சரியல்ல. சர்வே எண் 655/1F எனது தகப்பனார் மாணிக்கத்திற்கு பாத்தியப்பட்டதா என்றால் அதுபற்றி தெரியவில்லை, எனது தகப்பனாருக்கு தாவா சொத்தை தவிர வேறு சொத்து உள்ளதா என்றால் உள்ளது. வா.சா.ஆ.6 முதல் 16 வரையிலான ஆவணங்களுக்கும், தாவா சொத்திற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. ஆண்டியப்பனும், மாணிக்கமும் சேர்ந்து முத்துசாமிக்கு ஒரு சொத்தை

விற்றுள்ளார்களா என்றால் விற்றுள்ளார்கள். அதன் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. ஆண்டியப்பன் தனியாக ஒரு சொத்தை முத்துச்சாமிக்கு விற்றுள்ளாரா என்றால் விற்றுள்ளார். ஆண்டியப்பனுக்கு தனியாக ஒரு சொத்து பிரிந்திருந்தது என்றும், மாணிக்கத்திற்கு ஒரு சொத்து தனியாக பிரிந்திருந்தது என்றால் சரிதான். அந்த சொத்துக்களைத்தான் ஆண்டியப்பனும், மாணிக்கமும் 1 ம் பிரதிவாதி முத்துச்சாமிக்கு விற்றுள்ளார்கள் என்றால் சரிதான்.

3) அதேபோல் ஆண்டியப்பனுக்கு பிரிந்த மற்றொரு சொத்தைத்தான் முத்துச்சாமிக்கு விற்றுள்ளார் என்றால் சரிதான். முத்துச்சாமிக்கு விற்பனை செய்த சொத்துக்களில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரிதான். ஆரம்பத்தில் தாவா சொத்து உள்ளிட்ட சர்வே எண் 937/3 ற்கு பட்டா முத்துச்சாமி பெயரில் இருந்ததா என்றால் பத்திரம்தான் முத்துச்சாமி பெயரில் இருந்தது, பட்டா இல்லை. வருவாய்துறையில் மனு கொடுத்தது சம்பந்தமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், எனது தகப்பனாருக்குத்தான் தெரியும். வா.சா.ஆ.17 ன் அடிப்படையில் எனக்கு தாவா சொத்தில் எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் எனக்கோ, எனது தகப்பனாருக்கோ எந்த காலத்திலும் உரிமையோ, அனுபவமோ இருந்ததில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனாரும், அவரது சகோதரர்களும் 1970 ம் வருடம் தங்கள் குடும்ப சொத்துக்களை பாகம் பிரித்துக் கொண்டார்கள்.

4) அப்போது எனது தகப்பனாரின் சகோதரிகளும் இருந்தார்கள். பாகம் பிரிக்கப்பட்ட பின்னிட்டு எனது தகப்பனாரும், அவரது உடன்பிறந்தவர்களும் சொத்துக்கள் சம்பந்தமாக ஏதாவது ஒப்பந்தம் செய்து கொண்டார்களா என்றால் அதுபற்றி தெரியவில்லை. ஆண்டியப்பனும், மாணிக்கமும் சேர்ந்து முத்துச்சாமிக்கு விற்ற சொத்துக்களும், ஆண்டியப்பன் மட்டும தனியாக முத்துச்சாமிக்கு விற்ற சொத்தும் 1970 ம் வருட பாகம் மூலம் ஆண்டியப்பனுக்கும், மாணிக்கத்திற்கும் கிடைத்த சொத்துக்களா என்றால்

ஆமாம். ராசு (எ) ஆண்டியப்பனுக்கும், மாணிக்கத்திற்கும், பழனியப்பனுக்கும், முத்துச்சாமி ஆகியோருக்கு 1970ம் வருட பாகப்படி பிரிக்கப்பட்ட சொத்துக்களுக்கு தனித்தனியாக பட்டா கொடுக்கப்பட்டதா என்றால் கொடுக்கப்பட்டது. எனது தகப்பனாருக்கு கொடுக்கப்பட்ட பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. எனது தகப்பனாரின் சகோதரர்களுக்கு கொடுக்கப்பட்ட பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. சில சொத்துக்களை மேய்ச்சலுக்காக பொதுவாக வைத்திருந்தார்களா என்றால் ஆமாம். மேற்படி சொத்துக்கள் அண்ணன், தம்பிகள் நால்வருக்கும் பொதுவாக பாத்தியப்பட்டதா என்றால் ஆமாம். அந்த சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது.

5) பொதுவாக வைக்கப்பட்டிருந்த மேய்ச்சல் நிலங்களை எனது தகப்பனாரும், அவரது உடன்பிறந்தவர்களும் பாகம் பிரித்துக் கொண்டனரா என்றால் இல்லை. மேற்படி நிலங்களுக்கு கூட்டுப்பட்டாவாக கொடுக்கப்பட்டதா என்றால் தெரியவில்லை. எனது தகப்பனாரிடம் கேட்க வேண்டும். நான் உண்மை சங்கதிகளை மறைத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும், எனவே இவ்வழக்கு 1ம் பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் இன்று வந்திருககிறாரா என்றால் வந்திருக்கிறார்.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**